14th July 1962]

தோட்டிகளுக்கு சம்பள உயர்வும் பிரயாணப் படியும்.

306 கேள்வி:—**திரு. பி. முருகையன் :** கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா ?

(அ) கிராம அதிகாரிகளிடம் வேலை செய்யும் தோட்டிகளுக்குச் சம்பளம் உயர்த்தும் உத்தேசம் உண்டா ?

(இ) அவர்கள் கஜானுக்களுக்குப் பணம் செலுத்தச் செல்லும் போது பிரயாணப் படி ஏதேனும் கொடுக்கப்படுகிறதா ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) and (*b*) No, Sir.

திரு. பி. முருகையன் : ஸார், கிராமத் தலைவர்களிடத்திலே வேலை செய்யும் தோட்டிகளுக்குச் சம்பளம் குறைவாக இருக்கிறது. அதோடு அவர்கள் மாதம் இரண்டு தடவை கஜானுக்களுக்குச் சென்று பணம் வாங்கி செலுத்தவேண்டியிருப்பதால், அவர்களுக்குப் பிரயாணப் படி கொடுக்கும் உத்தேசமாவது அரசாங்கத்திற்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வி. ராமைய்யா : இப்போது எந்தவிதமான உத்தேசமும் கிடையாது.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : இப்போது தோட்டிகள் என்றிருப்பதை மாற்றி அவர்களுக்குக் கிராம சுத்தித் தொழிலாளர்கள் என்று பெயரிட இந்த அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வி. ராமைய்யா : கனம் அங்கத்தினர் அவர்கள் இந்தக் கேள்வியையே புரிந்துகொள்ளவில்லை என்றுதான் நான் கருதுகிறேன். கிராம அதிகாரிகளுக்கு உதவி செய்யக்கூடியவர்களை தான் இங்கு தோட்டிகள் என்று அழைத்திருக்கிறார்கள்.

திரு. டி, கார்ச்சா கவுடர் : ஸார், நீலகிரியிலே வேலை செய்யக்கூடிய இம்மாதிரி ஊழியர்களுக்கெல்லாம் ஒராண்டு கம்பளி ஆடைகள் கொடுக்கப்பட்டு, பிறகு திடீரென்று நிறுத்தப்பட்டிருக்கின்றன. இம்மாதிரி நிறுத்தப் பட்டதால், அந்த ஊழியர்கள் குளிரால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு மீண்டும் கம்பளி ஆடைகள் சப்ளை செய்ய ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வி. ராமைய்யா : இந்தக் கோரிக்கையைக் கனம் அங்கத்தினர் அவர்கள் நேராக எழுதி அனுப்பினால், போதிய கவனத்தைச் செலுத்தத் தயார்.

சாலைகள் (திருநெல்வேலி மாவட்டம்.)

306 உ கேள்வி:—**எம். எஸ். செல்வராஜன்:** கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா ?

(அ) தூத்துக்குடி–திருச்செந்தூர் ரோடு (வழி) ஆத்தூர், ஆறுமுகனேரி, காயல்பட்டணம், தூத்துக்குடி, திருச்செந்தூர் ரோடு, ஆத்தூர், ஆறுமுகனேரி, அடைக்கலாபுரம் ஆகிய இரு முக்கிய ரோடுகளிலும் மழை காலங்களில் பழுதுபட்டு, தண்ணீர் தேங்கி அடிக்கடி போக்குவரத்துத் தடைபடுவது சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா ?

(இ) அவைகளைத் தக்கபடி மேடாக்கி அபிவிருத்தி செய்ய என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) The Tuticorin-Tiruchendur road and the Arumuganeri Veerapandianpattinam road run in low lying areas and hence water stagnates in many places during rainy season.

(*b*) Tuticorin-Tiruchendur road is under Government and improvements to the road except in mile 15/6 to 17/3 are proposed to be carried out under maintenance grant on a phased programme.

[14th July 1962

Improvement to the portion of the road in mile 15/6 to 17/3 is estimated to cost of Rs. 5 lakhs and this work will be taken up later when funds become available.

The Arumuganeri-Veerapandianpattiam road is a panchayat union road and the Tiruchendur Panchayat Union Council has to take necessary action to improve the road.

திரு. எம். எஸ். செல்வராஜன்: ஸார், இது சர்வதேச முக்கியத்துவம் உள்ளதாக வளர இருக்கிற தூத்துக்குடி துறைமுகப் பகுதியாக இருக்கக் கூடிய காரணத்தினாலும், தேசம் முழுவதிலுமிருந்தும் யாத்ரீகர்கள் வந்து போகக்கூடிய திருச்செந்தூர் பகுதி ரோடுக்கு ஆறுமுகனேரி—வீரபாண்டிய பட்டினம் ரோடு குறுக்கு வழியாக இருப்பதினாலும், அரசாங்கமே இதற்கு பொறுப்பு எடுத்து, இந்த வேலையைத்துரிதமாகச் செய்து முடிப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா அல்லது பஞ்சாயத்து யூனியனே அரசாங்க உதவி பெற்று, அந்த வேலையைச் செய்து முடிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுப்ப தற்குத் தகுந்த தாக்கீதை அரசாங்கம் அனுப்புமா என்று அறிய விரும்பு கிறேன்.

கனம் திரு. வி. ராமையா: இப்பொழுது இருக்கக்கூடிய நிலையில் அது பஞ்சாயத்து யூனியன் ரோடு. பஞ்சாயத்து யூனியன் இதில் இன்னும் தீவிரமாகக் கவனம் செலுத்தி, நிதி உதவி கேட்கும் பட்சத்தில், அது தனியா கவனிக்கப்படும். கனம் அங்கத்தினர் குறிப்பிட்டதுபோல, இந்த ரோடு பெரிய அளவுக்கு விரிவாக வளரக்கூடிய தூத்துக்குடி பகுதி யில் இருக்கக்கூடிய காரணத்தினால், அங்கே பெரிய டெவலப்மெண்டு ஏற்படக்கூடுமாகையால், இதையும் பரிசீலனை செய்வதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது.

வெள்ளாடுகள்

†306 ஊ கேள்வி :—**திரு. எம். பி. வடிவேல்:** கனம் விவசாய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) மேய்ச்சல் தரை வசதியின்மையால் வெள்ளாடு இனம் நாளுக் நாள் குறைந்துகொண்டுவருகிறது என்பது உண்மையா ?

(இ) அப்படியானால், வெள்ளாட்டின் இன அபிவிருத்திக்காக அர சாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுக்க உத்தேசம் உண்டா ?

THE HON. SRI P. KAKKAN: (*a*) Goats are getting reduced in number. It cannot be specifically stated that it is due to want of grazing grounds but might be due to slaughter, etc., of goats.

(*b*) There is no special scheme at present for developing goats.

திரு. எஸ். முருகையன்: பொது மேய்ச்சல் தரைக்காக ஒதுக்கப் பட்டிருக்கிற நிலங்களில் கிராமங்களில் உள்ள வசதியானவர்கள் சாகுபடி செய்துகொண்டு, மேய்யச்சலுக்கு இடமில்லாமற்படிக்குச் செய்துவிடுகிறார் களே, இது சர்க்காருக்குத் தெரியுமா ?

கனம் திரு. பூ. கக்கன்: மேய்ச்சல் தரைகள் அங்கே பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காகப் பஞ்சாயத்துச் சட்டத்தில் இப்பொழுது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து யூனியன்கள் நல்ல முறையில் மேய்ச்சல் தரைகளைப் பராமரிக்க ஏற்பாடுசெய்ய வேண்டும். செடிகளை வெள்ளாடுகள் தின்றுவிடாமல் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். செம்மறி ஆடுகளுக்கு மேய்ச்சல் தரை வேண்டும். இப் பொழுது செம்மறி ஆடுகளை வளர்ப்பதற்கு, அதுவும் முக்கியமாக அவை களின் ரோமத்தை எடுப்பதற்கு, அரசாங்கம் அக்கறை எடுத்துக்கொண்டு வருகிறது. வெள்ளாடுகளைத்தான் அதிகமாகச் சாப்பிடுகிறார்கள். அப்படி அடித்துச் சாப்பிடுவதினால், அவைகளின் எண்ணிக்கை குறைந்திருக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.